**முக்கிய வார்த்தைகள்:**
ததப்புர்
அருள்
நன்றி தெரிவித்தல்
கவலை கொள்வது

# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**26 ஜூன் 2026 / 10 முஹர்ரம் ஹிஜ்ரி 1447**

## <u>ஆஷூரா : ததப்புரின் கண்ணாடியில்…</u>

الحَمْدُ لِلَّهِ الَّذِي نَوَّرَ بِالْقُرْآنِ الْقُلُوبَ، وَأَنْزَلَهُ فِي أَوْجَزِ لَفْظٍ وَأَعْجَزِ أُسْلُوبٍ.
أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ.
اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ الْأَبْرَارِ، وَأَصْحَابِهِ الْأَخْيَارِ.
أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**நமது
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுங்கள்; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் திருப்தியையும், நமது பாவங்களுக்கான அவனது மன்னிப்பையும், அவனது சொர்க்கத்தையும் நாடி நாம் செய்யும் பயணத்தை அல்லாஹ் எளிதாக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**
இன்றைய "குத்பா" பிரசங்கம், **ததப்புர்** அடிப்படையிலான தொடர் பிரசங்கங்களில் இறுதியானதாகும். இறைத்தூதர் மூஸா [அலை] அவர்களும்

அவர்களின் சமுதாய மக்களும் ஃபிர்அவ்னின் அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சம்பவம் நடைபெற்ற ஆஷூரா தினத்தை முன்னிட்டு, **ததப்புர்** [சிந்தனை செய்வதன்] அணுகுமுறையை நாம் அனைவரும் இணைந்து பற்றிப் பிடிக்க முயற்சிப்போமாக! மேலும், திருக்குர்ஆனின் "இப்ராஹிம்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 6-வது வசனத்தில் ஆழமாகச் சிந்தனை செய்வோமாக:

وَإِذْ قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ ٱذْكُرُوا۟ نِعْمَةَ ٱللَّهِ عَلَيْكُمْ إِذْ أَنجَىٰكُم مِّنْ
ءَالِ فِرْعَوْنَ يَسُومُونَكُمْ سُوٓءَ ٱلْعَذَابِ وَيُذَبِّحُونَ أَبْنَآءَكُمْ
وَيَسْتَحْيُونَ نِسَآءَكُمْ ۚ وَفِى ذَٰلِكُم بَلَآءٌ مِّن رَّبِّكُمْ عَظِيمٌ ٦

பொருள்: மூஸா தம் சமூகத்தாரிடம்: "ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரிடமிருந்து [அல்லாஹ்] உங்களைக் காப்பாற்றிய போது, அல்லாஹ் உங்களுக்குப் புரிந்த அருட்கொடையை நினைத்துப் பாருங்கள்; அவர்களோ, உங்களைக் கொடிய வேதனையால் துன்புறுத்தியதுடன், உங்களுடைய ஆண் குழந்தைகளை அறுத்துக் கொலை செய்தும் உங்களின் பெண் மக்களை மட்டும் உயிருடன் விட்டுக் கொண்டும் இருந்தார்கள் - இதில் உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு மிகப் பெரிய சோதனை ஏற்பட்டு இருந்தது" என்று கூறினார்.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!**

இந்த வசனத்தின் மூலம் நமது முதல் பார்வையில், "ஃபிர்அவ்ன் மற்றும் அவனது படையினரின் அடக்குமுறைப் பிடியிலிருந்து விடுதலை பெற அல்லாஹ் உங்களுக்கு எப்படி உதவி செய்தான் என்பதை நினைத்துப் பாருங்கள்" என இறைத்தூதர் மூஸா [அலை] அவர்கள் தனது சமுதாய மக்களுக்கு எவ்வாறு விவரித்தார்கள் என்பது நமக்குப் புரிய வருகிறது.

ஆனால், **ததப்புரின்** அடிப்படையில் இவ்வசனத்தை நாம் அணுகினால் நமக்குப் பின்வரும் பல கேள்விகள் எழலாம்:

**அல்லாஹ்வின் உதவியையும் அவனது அருளையும் நினைத்துப் பார்க்குமாறு, தனது சமுதாய மக்களுக்குக் கட்டளையிட வேண்டுமென, இறைத்தூதர் மூஸா [அலை] அவர்கள் ஏன் கட்டளையிடப்பட்டார்கள்?**

காரணம், பொதுவாக மனிதர்கள், அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கஷ்டங்களையும் சோதனைகளையும் நீக்கப்பட்ட பின், அல்லாஹ்வையும் அவனது அருள்களையும், அவர்களுக்கு அல்லாஹ் செய்த பல்வேறு உதவிகளையும் மறந்து விடும் இயல்பான தன்மையுடையவர்களாக இருக்கின்றார்கள். மேலும், தங்கள் சொந்தப் பெருமையால் ஏமாற்றப் படுபவர்களாகவும் இருக்கின்றார்கள். அனைத்து **அருட்கொடை**களும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து தான், வழங்கப்படுகின்றன என்பது உண்மையாக இருக்க, தம்மிடமுள்ள அனைத்து அருள்கள், தமது சொந்த முயற்சியால் கிடைத்தவை எனவும் நினைக்கின்றார்கள்.

**இந்த நினைவூட்டுதலை, இறைத்தூதர் மூஸா [அலை] அவர்களுடைய மக்கள் ஃபிர்அவ்னின் அடக்குமுறை ஆட்சியிலிருந்து காப்பாற்றப்பட்ட நிகழ்ச்சியுடன் அல்லாஹ் ஏன் இணைத்தான்?**

காரணம், பொதுவாக மனிதர்கள், கடந்த காலத்தில் தாம் அனுபவித்த கஷ்டங்களை நினைத்துப் பார்க்கும் போது, தற்போது அவர்களிடம் காணப்படும் அல்லாஹ்வின் **அருள்களைப்** போற்றி, அவற்றுக்கு அவர்கள் நன்றி செலுத்துவது எளிதாகி விடும்; இஸ்ரவேலர்கள், ஃபிர்அவ்னின் அடக்குமுறை ஆட்சியின் பிடியில் இருந்த போது அனுபவித்த துன்பங்களை நினைவில் கொள்ளும் போது, அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய சுதந்திரம் எனும் **அருட்கொடையை** நினைத்து, அல்லாஹ்வுக்கு அவர்கள் நன்றி செலுத்துவார்கள்.

**தற்போது ஓதப்பட்ட வசனத்துக்கும் ஆஷூரா தினத்துக்கும் என்ன தொடர்பு உள்ளது? எனும் கேள்வியும் எழுகிறது.**

ஏற்கனவே, இந்த "குத்பா" பிரசங்கத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்டதைப் போன்று, ஃபிர்அவ்னின் அடக்குமுறை ஆட்சியிலிருந்து இறைத்தூதர் மூஸா [அலை] அவர்களையும், இஸ்ராயீல் என அழைக்கப்படும் இறைத்தூதர் யஃகூப் [அலை] அவர்களின் பிள்ளைகளான இஸ்ரவேலர் களையும் அல்லாஹ் காப்பாற்றிய நிகழ்ச்சியை ஆஷூரா தினம் நினைவூட்டுகிறது. இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள், மதீனாவின் யூதர்கள் அந்த நாளில் நோன்பு நோற்பதைப் பார்த்த போது, அதற்கான காரணத்தை அவர்களிடம் கேட்டார்கள்; அதற்கு யூதர்கள்: இந்த நாளில் தான், இறைத்தூதர் மூஸா [அலை] அவர்களுக்கும் அவர்களின் சமுதாய மக்களுக்கும் அல்லாஹ் வெற்றியை வழங்கினான்; எனவே அதற்கு நன்றி தெரிவித்து நாங்கள் நோன்பு நோற்கின்றோம் எனப் பதில் கூறினார்கள். அப்போது இறைத்தூதர்[ஸல்] அவர்கள்:
*"உங்களை விட மூஸா வின் விஷயத்தில் எனக்கு அதிக உரிமை உள்ளது" எனக் கூறி, அந்த ஆஷூரா தினத்தில் தானும் நோன்பு நோற்று, தனது தோழர்களுக்கும் அந்த நாளில் நோன்பு நோற்குமாறு வழிகாட்டினார்கள்.* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்]

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**
**ஆஷூரா நிகழ்ச்சியில் காணப்படும் பாடமாகிறது, அந்நாளில் நாம் நோன்பு நோற்க வேண்டும் என்று மட்டுமா நமக்குப் போதிக்கிறது?**

நிச்சயம் இல்லை; நாம் **ததப்புரின்** அடிப்படையில் விவாதித்துக் கொண்டிருக்கும் திருக்குர்ஆனின் "இப்ராஹிம்" எனும் அத்தியாயத்தின் மேற்கண்ட 6-வது வசனத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது, நாம் இரண்டு பாடங்களைப் பெற்று, நமது வாழ்க்கையில் செயல்படுத்தலாம்; அவை பின்வருமாறு:

**முதலாவதாக, நமது உதடுகளில் தவழும் வார்த்தைகளால் மட்டும் நன்றி தெரிவிப்பதையும் கடந்து, நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.**

**நன்றியுணர்வு** எனும் பண்பானது, நாம் இன்னும் அடையாதவற்றைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, அல்லாஹ் ஏற்கனவே நமக்கு வழங்கியிருப்பவற்றை மதித்து, அவற்றுக்கு நன்றி செலுத்துமாறு போதிக்கிறது. எனினும், உண்மையான **நன்றி செலுத்துதல்** என்பது *"அல்ஹம்துலில்லாஹ்"* என நாவால் மொழிவது மட்டுமல்ல.

ஒருவர் உண்மையாகவே நன்றி செலுத்துபவராக இருந்தால், அவரது நன்றியுணர்வு அவரது செயல்களிலும் பிரதிபலிக்க வேண்டும். இறைத்தூதர்[ஸல்] அவர்களின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் அல்லாஹ்வின் உதவிக்கு **நன்றி தெரிவித்து** ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்றார்கள். அவ்வாறே நாமும் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள **அருட்கொடைகளை,** நற்காரியங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தி **நன்றி செலுத்த** வேண்டும். உதாரணமாக, நம்மிடமுள்ள செல்வங்களை தேவையுள்ளவர்களுக்கு உதவுவதற்காகப் பயன்படுத்தலாம்; நமக்குக் கிடைக்கும் நேரத்தை நமது பெற்றோர்களுக்கும் குடும்பத்தார்களுக்கும் சேவை செய்வதற்குப் பயன்படுத்தலாம்; நாம் பெற்றுள்ள கல்வியறிவை சமுதாயத்துக்கு வழிகாட்டவும் பயனளிக்கவும் பயன்படுத்தலாம். இவ்வாறுதான், ஒரு ஓரிறை நம்பிக்கையாளராகிய முஃமின், அவருக்கு வழங்கப்பட்டுள்ள அல்லாஹ்வின் **அருட்கொடைகளை** நினைவில் கொண்டு, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு **நன்றி** செலுத்த வேண்டும்.

**இரண்டாவதாக, மற்றவர்களின் சுமைகளையும் வாழ்க்கைச் சோதனைகளையும் கவனத்தில் கொண்டு, அவர்களுக்குக் கிருபை காட்டுவது**

இறைத்தூதர் மூஸா [அலை] அவர்கள், தனது சமுதாய மக்கள் எதிர்கொண்ட அநீதங்கள் மற்றும் துன்பங்களிலிருந்து அவர்களை விடுவிக்க கடுமையாக

முயற்சி செய்தார்கள். அவ்வாறே, ஓரிறை நம்பிக்கையாளர்களான நாமும் மற்றவர்களால் எதிர்கொள்ளப்படும் அவலநிலை மற்றும் கஷ்டங்களில் **கவனம்** செலுத்த வேண்டும். தற்காலத்தில், வாழ்க்கைச் சோதனைகள் பல வகைகளாகக் காணப்படுகின்றன. சிலர் சைபர் வெளியிலும், சிலர் தொழிற்கூடங்களிலும், சிலர் தமது குடும்பத்துக்குள்ளேயும் உடல் ரீதியாகவும், வாய்மொழியிலும், உணர்வு ரீதியாலும் துன்புறுத்துதல்களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

வெறும் அனுதாப உணர்வையும் கடந்து, ஒரு ஓரிறை நம்பிக்கையாளர் தனது சக்திக்கு ஏற்ப மற்றவர்களுக்கு உதவிகளைச் செய்ய முயற்சிக்க வேண்டும். உதாரணமாக, பாதிக்கப்பட்டவரின் உரிமைகள் பாதுகாக்கப் படுவதற்காக, அவர் சம்பந்தமான விஷயங்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். அல்லாஹ்வின் உதவி கிடைக்கும் என்பது நிச்சயமான விஷயம் தான்; எனினும், அதே சமயம், கஷ்டப்படுபவர்களைப் பாதுகாப்பது மற்றும் அவர்களுக்கு உதவுவது ஆகியவற்றின் மூலம் ஒரு ஓரிறை நம்பிக்கையாளரும் உதவி செய்வதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் சமுதாய மக்களாகிய நாம் ஆஷூரா தினத்தைக் கொண்டாடுவதற்கு அதிகத் தகுதியைப் பெற்றுள்ளோம் என்றால், அல்லாஹ்வின் **அருட்கொடைகளை** பரிபூரணமான **நன்றியுணர்வுடன்** நினைவில் கொள்வதற்கும், சக சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் கஷ்டங்களில் அதிகக் **கவனம்** செலுத்துவதற்கும் நாம் அதிகத் தகுதி பெற்றவர்களாக இருக்கின்றோம்.

இந்தச் சீரிய பண்பை, திருக்குர்ஆனுடன் தொடர்சியான உறவைப் பெற்றிருப்பதன் மூலமும், அதில் அடங்கியுள்ள செய்திகளைப் படித்து, அவற்றில் **ததப்புர்** அதாவது, ஆழ்ந்து சிந்திப்பதன் மூலமாகவும் பெற முடியும். எனினும், ஒருவரின் சொந்தப் புரிதலின் அடிப்படையில் இல்லாமல், நற்பெயர் பெற்ற திருக்குர்ஆன் விரிவுரையாளர்களின்

விளக்கங்களின் அடிப்படையில் திருக்குர்ஆனில் சிந்திப்பது அவசியமாகும். அந்நிலையில், திருக்குர்ஆனைப் பற்றிய நமது புரிதல் சரியானதாக இருப்பதுடன், ஆன்மீக ரீதியிலும் ஆக்கப்பூர்வமானதாகவும் ஆற்றல்மிக்க தாகவும் அமையும்.

இத்துடன், **ததப்புர்** அடிப்படையிலான தொடர் பிரசங்கங்கள் முடிவுக்கு வருகின்றன. இந்த நான்கு வாரங்களில் பகிர்ந்து கொள்ளப்பட்ட **ததப்புரின்** அணுகுமுறை, நமக்குப் பல பாடங்களையும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் நெருங்கும் வகையில் நமது வாழ்க்கையை வடிவமைப்பதற்கான வழிகாட்டுதலையும் நமக்கு வழங்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَموَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالاعْتِدَاءَ. اللَّهُمَّ إِنَّا نَسْتَودِعُكَ أَنْفُسَنَا وَأَهْلَنَا وَبِلَادَنَا، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِ الْمُفْسِدِينَ، وَكَيْدِ الْمُعْتَدِينَ، وَظُلْمِ الظَّالِمِينَ. اللَّهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُورِهِمْ، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِهِمْ.

اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكانٍ عامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَة حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالْمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.